**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்**
**ந.க..எண்.2182/ஆ5/2024, நாள்.04/06/2024**

.....

பொருள் பள்ளிக் கல்வி – அரசு / அரசு நிதியுதவி பெறும் / தனியார் பள்ளிகள் – மாணவ / மாணவிகளுக்கான பயிலும் பள்ளியிலேயே வங்கி கணக்கு துவங்குதல் – நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் (Standard Operating Procedure) – தொடர்பாக

பார்வை

1. அரசாணை நிலை எண். 72 பள்ளிக் கல்வித்துறை நாள்.11.03.2024
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும் தனியார் பள்ளிகள் இயக்குநரின் இணைச் செயல்முறைகள் ந.க.எண்.62956/எம்/இ4/2023, நாள். 31.05.2024
3. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 62956/எம்/இ4/2023, நாள். 04.06.2024

.....

பார்வை 2–ல் காணும் தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்குநர் மற்றும் தனியார் பள்ளிகள் இயக்குநரின் இணைச் செயல்முறைகளில், அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு அவர்கள் பயிலும் பள்ளியிலேயே வங்கி கணக்கு தொடங்குவதற்கு புதிய பதிவுகள் மற்றும் வங்கிக் கணக்கு எண் உடன் ஆதார் எண்ணை இணைத்தல் தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கான நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் (Standard Operating Procedure) கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

(i) பள்ளிக் கல்வி துறையின் கீழ் அனைத்து பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியர்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்கள் வகுத்து முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களும் இடைநிற்றல் இன்றி தொடர்ந்து கல்வி பயில ஏதுவாக உதவி தொகைகள் மற்றும் ஊக்க தொகைகள் வழங்கப்பட்டு வருகிறது. இவ்வுதவித் தொகை மற்றும் ஊக்க தொகை உரிய பயனாளர்களான மாணவர்களுக்கு குறித்த நேரத்தில் நேரடியாக வழங்கப்படுவதை உறுதி செய்யும் நோக்கில் நேரடிப் பயனாளர் பரிமாற்றம் (DBT) மூலம் பயனாளர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக பணம் செலுத்திடும் முறை நடைமுறைபடுத்தப்பட்டுள்ளது.

(ii) இவ்வாறாக நேரடி பயனாளர் பரிமாற்றம் (DBT) செய்வதற்கு ஒவ்வொரு மாணவருக்கும் ஒரு வங்கிக் கணக்கு கட்டாயம் தேவைப்படுகிறது. எனவே, மாணவர்களுக்கு வங்கிக் கணக்கு புதியதாக துவங்குவதற்கு பள்ளிக் கல்வித் துறை மற்றும் வங்கிகள் பணிகள் சார்ந்து நிலையான வழிகாட்டு நெறிமுறைகள் (SOP) வகுக்க வேண்டியது அவசியமாகிறது.

2. பள்ளிகளில் வங்கிக் கணக்கு துவங்குதல் சார்ந்து மாணவர்களின் வயது அடிப்படையில் இரண்டு நிலைகளில் மேற்கொள்ளுதல் வேண்டும்.

**பள்ளிகளில் வங்கிக் கணக்கு துவங்கும் நிலைகள் –**

**நிலை 1 : 5+ –10 வயது வரையுள்ள மாணவர்களுக்கு புதிய வங்கிக் கணக்கு துவங்குதல்**

5 வயது பூர்த்தியடைந்த குழந்தைகள் முதல் 10 வயது வரையிலுள்ள குழந்தைகளுக்கு வங்கிக் கணக்கு துவங்குவதற்கு ஆதார் எண் கட்டாயமானதாகும். இந்த வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு வங்கிக் கணக்கு துவங்குதல் என்பது மாணவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் பெயரில் இணைக் கணக்காகவே துவங்கப்படும். இவ்விணைக் கணக்கினை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து பராமரிக்கத்தக்க வகையிலேயே இருக்கும். இவ்விணைக் கணக்கிற்கு ஆரம்பத் தொகை ஏதுமில்லாத பூஜ்ஜியத் தொகைக் கணக்காகவே துவங்கப்படும். இவ்வகை இணைக் கணக்கு துவங்கும் போது பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்களின் ஆதார் எண்களை இணைக்க இயலாது. எனவே இவ்வயதுடைய குழந்தைகளிடம் 5 வயதுக்கு குறைவான நிலையில் எடுக்கப்பட்ட ஆதார் விவரங்களுடன் கூடிய அட்டை மட்டுமே இருக்க நேரிடும். இந்நிலையில் 5 வயது பூர்த்தியடைந்த குழந்தைகளுக்கு கட்டாய பயோமெட்ரிக் புதுப்பித்தல் மேற்கொள்ள வேண்டியது அவசியமானதாகும். இக்கட்டாய பயோமெட்ரிக் புதுப்பித்தல் மேற்கொள்ளும் நிகழ்வில் மட்டுமே குழந்தைகளின் முகம், கைரேகைகள் மற்றும் கருவிழிகள் பதிவு மேற்கொள்ளப்படும். இவ்விவரங்களுடன் கூடிய புதுப்பிக்கப்பட்ட ஆதார் எண்கள் மட்டுமே, வங்கிக் கணக்கு துவங்கும் போது இணைக்கத்தக்கதாக இருக்கும். எனவே மேற்குறிப்பிட்டுள்ளவாறு ஒவ்வொரு குழந்தைக்குமான விவரங்களைப் பெற்றுத் தருவது முதல் நிலை ஆகும்.

**நிலை 2 : 10 வயதுக்கு மேல் புதிய வங்கி கணக்கு துவங்குதல்**

10 வயதுக்கு மேல் உள்ளவர்களுக்கு புதிய வங்கிக் கணக்குகளை துவக்கிடுவதற்கு மாணவனின் 1. ஆதார் அட்டை நகல் 2. மாணவனின் அடையாள அட்டை 3. பாஸ்போர்ட் அளவு புகைப்படம் (தேவையெனில் மட்டும்) குழந்தைகளின் ஆதார் பதிவு விவரங்கள் தயார்நிலையில் வைத்திருத்தல் வேண்டும். மேலும் பெற்றோர் அல்லது பாதுகாவலர் விவரங்கள் தொலைபேசி எண் விவரங்களுடன் தயார் நிலையில் வைத்திருத்தல் வேண்டும். வங்கிக் கணக்கினை துவக்கிடுவதற்கான படிவங்களையும் உரிய விவரங்களுடன் தயார் நிலையில் வைத்திருத்தல் வேண்டும். பள்ளிக்கு அருகாமையில் உள்ள அஞ்சல் அலுவலங்களின் விவரங்கள் மற்றும் வங்கிகளின் விவரங்கள் தயாரித்து வைத்தல் வேண்டும்.

**வங்கி கணக்குகளின் தகவல்களை EMIS Portal இல் பதிவேற்றம் செய்தல்**

வங்கி கணக்குகளின் தகவல் உட்பட தேவையான தகவல்களை பள்ளியளவில் பதிவேற்றம் செய்திடல் வேண்டும்.

**அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்கள் மற்றும் முதல்வர்கள்**

- தலைமையாசிரியர்கள் தமது பள்ளியில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் வங்கிக் கணக்கு துவக்குதல் மற்றும் ஆதார் விவரம் புதுப்பித்தல் மேற்கொள்ளப்பட்டதை உறுதி செய்யும் பொறுப்பு இவரைச் சார்ந்ததாகும்.
- தங்களது பள்ளிக்கு வங்கிப் பணியாளர்கள் வருகை தரும் போது அவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து ஆதார் பதிவு மற்றும் புதுப்பித்தல் பணியினை மேற்கொள்ள ஏற்பாடு செய்தல் இவரது பொறுப்பாகும்.
- மாணவர்கள் இச்சேவையினை பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழுவினருக்கு தகவல் தெரிவித்து முழுமையாக இவ்வசதியினை மாணவர்கள் பெறுவதற்கு வழிவகுப்பவர் இவரே.

- வங்கிக் கணக்கு துவங்குதல் மேற்கொள்ளும் பணியானது அந்தந்தப் பள்ளியிலுள்ள தலைமையாசிரியர்கள் / முதல்வர்களின் மேற்பார்வையிலுள்ள பகுதியில் இப்பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.
- மாணவர்களின் வங்கி கணக்கு விவரம் EMIS –ல் விடுபட்டிருப்பின் அதனை மாணவர்களிடம் பெற்று EMIS –ல் பதிவு செய்ய வேண்டும்.
- வங்கி கணக்கு இல்லாத மாணவர்கள் மேல் குறிப்பிட்ட முகாமை பயன்படுத்தி வங்கி கணக்கு எண் பெற்று அதன் விவரங்கள் உடனடியாக EMIS இணையதளத்தில் உள்ளீடு செய்தல் வேண்டும்.

பார்வை 2–ல் காணும் தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளில், பள்ளிக் கல்வி துறை மற்றும் அஞ்சலக துறையுடனான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி அஞ்சல் அலுவலர்கள் அஞ்சல் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள பள்ளிகளில் மாணவ மாணவிகளுக்கு வங்கி கணக்கு துவங்கும் பொருட்டு பள்ளிகளில் முகாம் அமைப்பதற்காக தலைமையாசிரியர்களை தொடர்பு கொண்டு அதற்கான பணிகளை மேற்கொள்வர். தலைமையாசிரியர்கள் மேற்குறிப்பிட்ட பணிகளை சிறப்பாக மேற்கொள்வதற்கு ஏதுவாக தேவையான அனைத்து ஒத்துழைப்புகளையும் தங்கள் பள்ளிகளுக்கு வரும் அஞ்சலக அலுவலர்களுக்கு வழங்கிடவும், வங்கி கணக்கு இல்லாத மற்றும் வங்கிக் கணக்கு செயல்பாட்டில் இல்லாத அனைத்து மாணவ மாணவிகளுக்கும் புதிய அஞ்சலக வங்கி கணக்கை துவங்கி அவ்வாறு துவங்கப்பட்ட வங்கி கணக்கு சார்ந்த விவரங்களை EMIS–இல் STUDENT PROFILE –ல் சரியாக பதிவேற்றம் செய்தல் வேண்டும்.

மேற்காண வழிமுறைகளை பின்பற்றி மாணவ / மாணவிகளுக்கு பள்ளிகளிலேயே வங்கி கணக்கு துவங்குதல் குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அனைத்து அரசு / அரசுநிதியுதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு – பார்வை 2ன் கடித நகல்.

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர் –
அனைத்து அரசு/ அரசு / அரசுநிதியுதவி பெறும் மற்றும் தனியார் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள்,
வேலூர் மாவட்டம்.

நகல் –

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
3. (இடைநிலைக் கல்வி / தனியார் பள்ளிகள் / தொடக்கக் கல்வி), வேலூர் மாவட்டம்.
(தொடர் நடவடிக்கை மேற்கொள்ள தெரிவக்கப்படுகிறது)
4. வட்டாரக் கல்வி அலுவலர்கள்,
மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) மூலமாக)
5. உதவி திட்ட அலுவலர்,
மாவட்ட திட்ட அலுவலகம்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் மாவட்டம்.
(இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)